தெரிவிக்கப்பட்டது. இப்போது தலைமை நீதிபதி அவருடைய காரிலே தேசியக் கொடியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற அளவிற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மாவட்ட அளவிலே உள்ள நீதிபதிகள் சிலர் தனிப்பட்ட ஸ்தாபனங்களில் உறுப்பினர் களாகவும், நிர்வாகிகளாகவும் இருந்து, அதன் காரணமாக தேர்தலில் ஈடுபட்டு விருப்பு வெறுப்புடன் செயல்படுகிறார்கள் என்பதை அரசு அறியுமா? அது போன்றவர்கள் இந்த ஸ்தாபனங்களில் தொடர்பு கொள்வதைப் பொறுத்து ஒரு நடைமுறை விதி ஏற்படுத்துவதைப் பற்றி அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசு அறியாத காரணத்தினால் தான், அவர்கள் சொன்னதன்பேரில் விவரங்கள் இப்போது அறிய விரும்புகிறது.

Participants in the Anti-Hindi Agitation

@ * 287Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU S. S. THENNARASU): Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether there is any proposal to grant pension to those who were imprisoned for taking part in the Anti-Hindi Agitation and to those who laid down their lives in the agitation; and

(b) if so, the details thereof?

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எஸ். எஸ். தென்னரசு சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர்களுக்கும், உயிர் நீத்த தியாகிகளுக்கும் மான்யம் அளிக்கும் திட்டம் ஏதாவது உண்டா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 1965 ஆம் ஆண்டில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தீக்குளித்த ஒன்பது பேரைச் சார்ந்திருந்த குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 1—4—1972 முதல் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 மானியம் கொடுக்க

@ 28—3—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

1973 மார்ச் 29]

ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அப்போராட்டத்தின்போது காவலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த ஐம்பத்து மூன்று பேரைச் சார்ந்து நின்ற ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் கருணை இழப்பீட்டுத் தொகையாக ரூ. 2,000 கொடுக்கவும் இந்த அரசு ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. சிறை சென்றவர்களுக்கு மானியம் வழங்கலாமா என்பது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு சிறைவாசம் பெற்றவர்கள் தமிழ் நாட்டினுடைய தியாகச் சின்னமாக விளங்குகிற காரணத்திஞல், அவர்களுக்கு மானியம் வழங்குவதை அரசாங்கம் அனுதாபத்தோடு பரிசீலனை செய்து விரைவில் அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அனுதாபம் இருக்கிற காரணத்திஞல் அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன்.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு நாட்டின் நலனுக்கான மிக நல்ல பணியில் ஈடுபட்டு, நல்ல காரியத்தில் ஈடுபட்ட அந்தத் தியாகிகளுடைய பெயர்ப் பட்டியலையெல்லாம் நாங்கள் அறிந்துகொள்கிற வகையிலே அறிவிப்புச் செய்யப்படுமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே தீக்குளித்தவர் களுடைய பெயர்ப் பட்டியல் அளிக்கப்பட்டுத்தான் அவர்களுடைய குடும்பத்திற்கு 100 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிப் பிரயோகத்தில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது உயிர் இழந்தவர்கள் 53 பேர்களுடைய குடும்பத்திற்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அந்த 53 பேர்களுடைய பெயர்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. சிறை சென்றவர்களுக்கு மானியம் வழங்கு வதற்காகப் பரிசீலிக்கப்படுகிறது. அதைப்பற்றி முடிவு எடுத்த பிறகு, யார், யாருக்கு வழங்கப்படுகிறது என்கிற பட்டியல் தெரிவிக்கப்படும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர் இழந்தவர்கள் எத்தனை நபர்கள். மேலும்......

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : எத்தனை பேர்கள் என்று சொல்லிவிட்டார்களே.

திரு. எல். பலராமன் : (I am Sorry) மன்னிக்க வேண்டும். அவர்களுக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்? என்னென்ன தகுதி உடையவர்களுக்கு அந்த மானியம் வழங்கப்படுகிறது? மேலும்

கட்சி சார்பு இல்லாமல் வேறு நபர்கள் எத்தனேயோ அசந்தர்ப்பம் காரணமாக உயிர் நீத்திருக்கிருர்கள். அவர்களுக்கு இந்த மானியத்தில் இடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : 53 பேர் 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர் இழந்தார்கள் என்று சொன்னேன். இந்த 53 பேர்களும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று நான் குறிப்பிடவில்லை. ஆக கட்சியைச் சேர்ந்தவர்கள், கட்சியைச் சேராதவர்கள், மாணவர்கள் இவர்களெல்லாம் இந்த 53 பேரிலே அடங்குவார்கள். எந்தக் கட்சியினுடைய சார்பாகவும் இல்லாமல், அவர்கள் இறந்தவர்கள், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே உயிர் இழந்தவர்கள் என்ற அளவில், அவர்களுடைய குடும்பத்தாருக்கு இந்தத் தொகை கொடுக்கப்படுகிறது. இந்த அரசு ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டாயிரம் ரூபாய் தந்து வருகிறது என்று சொன்னேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இறந்தவர்களுக்கு இப்போது மானியம் வழங்குவதாக முடிவு செய்யப்பட்டிருப்பதாக முதலமைச்சரவர்கள் சொன்ஞர்கள். உடல் ஊனம் உற்றவர்களும் இதிலே இருக்கிருர்களா? உடல் ஊனம் உற்றவர்களுக்கும் மானியம் வழங்குவதற்கான ஆலோசனை அரசிடத்திலே இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : சிறை சென்றவர்களுக்கு மானியம் வழங்குவது பற்றி பரிசீலிக்கப்படும்போது, இவர்களுடைய பெயர்களும் அறிவிக்கப்படுமானுல், அவைகளேயும் பரிசீலிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

Classifications in Grade I and Grade II Tamil Pandits

* 296 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the basis on which the classifications are made between Grade I and Grade II Tamil Pandits in schools ?

முதல் நிலை, இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்களை வகைப்படுத்துதல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பள்ளிகளில் முதல் நிலை, இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்கள் எந்த அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றனர்.